# பதியதலாவ பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜுன் 07 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 பெப்ரவரி 21 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பதியதலாவ பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதியதலாவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவருஞ் செலவினம் ரூபா 7,955,280 ஆகும். வருமான செலவினக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 7,674,181 ஆம் காட்டப்பட்டமையால் ஆண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 281,099 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) வருவாய்ப் பதிவேட்டின்படி, மீளாய்வாண்டினது மீண்டுவரும் வருவாய் ரூபா 6,636,366 ஆகும். எனினும், வருமான, செலவினக் கணக்கில் ரூபா 7,032,196 கணக்கிலிடப்பட்டதால் ஆண்டிற்கான வருவாய் ரூபா 395,830 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருவாய் ரூபா 18,000 மற்றும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முத்திரைக் கட்டண வருவாய் நிலுவையாயன ரூபா 48,400 என்பன கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 27,250 நீதிமன்றத் தண்டப் பணம் மீளாய்வாண்டினது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நீதமன்றத் தண்டப் பணம் ரூபா 281,555 ஆகிய போதும் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 101,167 சேர்த்துக் கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டினது நீதிமன்றத் தண்டப்பண வருவாய் ரூபா 180,388 குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. மேலும், 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்திற்குரிய ரூபா 207,639 கணக்கிலிடப்படவில்லை.

(உ) அநேக ஆண்டுகளாக ரூபா 114,240 கையிருப்பானது நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், அவ்வாறான கையிருப்பு எதுவும் இருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

#### (அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2013 ஏப்ரல் 11 ஆந் திகதியளவில் 05 கணக்காய்வு ஐய வினாக்களுப் பதில் வழங்கப்படாதிருந்தது. அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது கணிப்பிடப்படக்கூடிய பெறுமதி ரூபா 925,999 ஆகும்.

#### (ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 34,427,331 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 641,985 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,043,722 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | குத்தகை வாடகை | 1,453,700 | 1,003,675 | 225,995 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 535,000 | 355,700 | - |
| (iii) | சேவைக் கட்டணம் | 422,000 | 441,550 | - |
| (iv) | பிடிஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 336,000 | 163,542 | - |
| (iv) | பிற வருவாய் | 154,000 | 149,657 | 24,115 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 207,639 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 48,400 |

### 2.2.3 நிலுவையாக உள்ள பிற வருவாயை அறவிடுதல்

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை கணக்குகளில் காட்டப்பட்ட நிலுவையாக உள்ள பிற வருவாய் (இறைச்சிக் கடை வரி) ஆகிய ரூபா 24,115 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை சபையால் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவிலான கடை வாடகை நிலுவையாகிய ரூபா 118,820 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்